DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW20 |
| Name | : | ரமேஷ் |
| Father's / Husband's Name | : | சிவண்ணா |
| Age | : | 49 |
| Religion | : | இந்து |
| Calling | : | சோசியல் ஒர்க் |
| Caste | : | ஆதிகர்ணாடகா |
| Village | : | பெங்களூர் |
| Date | : | 15.04.2021. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெங்களூரில் உள்ள கன்டிரவா நகர், நந்தினி லே அவுட் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கார் வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னுடைய காரின் ஓட்டுனர் பெயர் அருண். தற்போது அவர் உயிருடன் இல்லை. இறந்துவிட்டார். கே. ஏ. 02 ஏ இ 1694 என்ற காரை இவ்வழக்கின் எதிரி அருண் என்ற அருண்குமார் சர்வீஸ் செய்வதற்காக 24.10.2015 அன்று எடுத்துச்சென்றார். அதன் பிறகு வண்டியை எடுத்து வரவில்லை. எந்த காவல் நிலையம் என்று ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்று விசாரித்தேன். அப்போது ஒரு பெண்ணை என் காரில் கொண்டு சென்றதாகவும் அதன் மூலம் ஒருவர் இறந்துவிட்டார் என்றும் தெரிந்துகொண்டேன். நான் நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்து என்னுடைய காரை பெற்றுக்கொண்டேன். அந்த காரை நீதிமன்றத்திற்கு கொண்டு வரவில்லை. பெங்களூரில் லாக்டவுன் போடப்பட்டுள்ளதால் ஒரு வருடமாக வண்டி ஓட்ட முடியாததால் கார் பழுதாகி ஓட்டமுடியாத நிலையில் உள்ளதால் காரை

கொண்டுவரமுடியவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**